OS:616/2018

Date: 14.08.2021

பெயர் : செல்வராஜ்

வாதி தரப்பு சாட்சி 2 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

<u>குறுக்கு விசாரணை - 1ம் பிரதிவாதி தரப்பில் இல்லை என தெரிவிக்கப்பட்டது</u>

<u>குறுக்கு விசாரணை - 2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில்</u>

நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன்- நெசவு தொழில் செய்கிறேன். நான் நெசவு தொழில் செய்து துணிகளை மொத்த வியாபாரம் செய்கிறேன். நெசவு தொழிலில் நான் ரொக்கத்திற்கு தான் வியாபாரம் செய்கிறேன் வங்கி பரிமாற்றம் மூலம் பணம் பெற்றக் கொள்கிறேன். செலவடை கிராமத்தில் நான் முன்னாள் கவுன்சில்ர் என்றால் சரிதான். தொழில் செய்யும் வகையில் எனக்கு கடன் கொடுப்பதும் மற்றும் வாங்குவதும் பற்றிய வழக்கம் எனக்கு தெரியும். சாதாரணமாக கடன் பெறப்படும் போது ஆதாரமாக என்ன வகையான ஆவணங்கள் பெறப்படும் என்ற விவரம் எனக்கு தெரியும். எனது முதல் விசாரணை வாக்குமூல விவரங்களை நான் படித்து பர்ரத்து தான் கையொப்பம் செய்துள்ளேன். அதேபோல் ஆவணங்களில் நான் கையொப்பம் செய்யும் போது ஆவண விவரங்களை படித்து பார்த்து தான் நான் கையொப்பம் செய்வேன். உண்மைக்கு மாறான விவரங்கள் ஒரு ஆவணத்தில் கண்டிருந்தாலோ அல்லது பொய்யான ஆவணத்திலோ நான் கையொப்பம் செய்யும் வழக்கம் உடையவரா என்றால் இல்லை. நான் கையொப்பம் செய்ததாக சொல்லியுள்ள வா.சா-ஆ 3 ஆவணத்தில் உள்ள விவரங்களை படித்து பர்ரத்து தான் அதில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். சாட்சியிடம் வா.சா.ஆ 3 காண்பிக்கப்பட்டு அதில் ஒரு லட்சம் கடனுக்காக ஆவணம் எழுதி கொடுக்கப்பட்டதாக கண்டுள்ளதா என்று கேள்வி எழுப்பப்பட்டது, சாட்சி ஆவணத்தை படித்து பார்த்து விட்டு கடனுக்காக ஆவணம் எழுதப்பட்டதாக கண்டிருக்கவில்லை என்று பதில் அளிக்கிறார். வா.சா.ஆ 3 ஆவணத்தில் என்னை பொது அதிகார முகவராக நியமனம் செய்யப்பட்டு மேற்படி ஆவணத்தில் கண்டுள்ள சொத்தை விற்பனை செய்வதற்காக எனக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் மேற்படி வா.சா.ஆ 3 ஆவணம் பதிவு செய்வதற்கு முன்பு நான் சாட்சி கையொப்பம் செய்வதற்கு முன்பு ஆவணத்தின் சங்கதியை நான் படித்து பார்த்தேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் கண்டுள்ள சங்கதி உண்மையானது என்று ஒப்புக் கொண்டு தான் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

வா.சா.ஆ 3ல் சாட்சிகளில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் என்னுடைய கையொப்பம் தான். மேற்படி ஆவணத்தை போலியாக என்னை சாட்சியாக வைத்து தயார் செய்து கொண்டார்கள் என நாளது தேதிவரை வழக்கறிஞர் அறிவிப்போ, காவல் நிலைய புகாரோ நான் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இராமசந்திரன் என்பவரை பொது அதிகார முகவராக நியமனம் செய்து ஆவணம் எழுதப்பட்டது என்றும் அதில் தான் நான் சாட்சி கை யாப்பம் செய்துள்ளேன் என்றும் தற்பொழுது வாதிகளுக்கு ஆதரவாக கடனுக்காக மேற்படி ஆவணம் எழுதப்பட்டது என்று நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல- வாசா.ஆ 3 பதிவு செய்யப்படும் போது சார் பதிவாளரிடம் ஆவணத்தின் தன்மை குறித்து நான் ஆட்சேபனை எதுவும் எழுப்பவில்லை என்றால் சரிதான். வாதிகள் எந்த சொத்தை பொறுத்து தாவா தாக்கல் செய்துள்ளனர் என்ற விவரம் எனக்கு தெரியும். சொத்து என்ன நிலையில் உள்ளது என்ற விவரமும் எனக்கு தெரியும். தாவா சொத்து விவரத்தில் தாவா

சொத்தில் ஒரு தார்சு கட்டிடமும், அட்டை வீடும் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா சொத்து விவரத்தில் காலி மனை நிலம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து விவரத்தில் தார்சு கட்டிடமோ, வீடோ இருப்பதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வாதிகள் தாவாவில் சொத்து விவரத்தில் குறிப்பிடாத சொத்து விவரங்களை எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் நான் மிகைப்படுத்தி கூறி உள்ளேன் என்றால் சரியல்ல. வாதிகள் இராமச்சந்திரன் என்பவருக்கு தாவா சொத்துக்களை விற்பனை செய்ய பொது அதிகாரம் வழங்கி அதனடிப்படையில் இராமச்சந்திரன் 2, 3 பிரதிவாதிகளுக்கு சொத்தை விற்பனை செய்து அவ்ரகளுக்கு பின்னிட்டு 4ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துள்ளார் என்றும், தற்போது 4ம் பிரதிவாதி தான் தாவா சொத்தின் அனுபவத்தில் உள்ளார் என்றால் சரியல்ல.

வாதிகள் தாவா சொத்தின் சுவாதீனத்தில் இருப்பதாக நான் எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் தவறானது என்றால் சரியல்ல. வா.,சா.ஆ 3 ஆவணத்தில் ஆவணத்தின் சங்கதி தெரிந்து சாட்சி கையொப்பம் செய்து விட்டு தற்போது மேற்படி ஆவணத்திற்கு முரணாக நான் சாட்சியம் அளிக்க முடியாது என்றும் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை - 4 ம் பிரதிவாதி தரப்பில்</u>

<u>2 மற்றும் 3 பிரதிவாதிகள் குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.</u>

<u>மறுவிசாரணை</u>

இல்லை.

ஒப்பம்/PW3

ஒப்பம் / சார்பு நீதிபதி, ஓமலூர்,